# இயேசுவும் சமாரியர்களும் - விளைந்த நிலங்கள்

**எல்லா சமுதாயக் குழுக்களிலும் நாம் சீஷர்களை உருவாக்க வேண்டுமென இயேசு கட்டளை இட்டார்.**

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் R5b பாடத்தைப் படிக்கவும்.

ஜெபம்: "கர்த்தராகிய இயேசுவே, நாங்கள் நற்செய்தியை எடுத்துச் செல்ல வேண்டிய புறக்கணிக்கப்பட்ட மக்களை எங்களுக்குக் காட்டும். யாரை அனுப்புவது என்பதையும் காட்டும்."

1. **உங்கள் சமுதாயத்துக்கு அருகில் இருக்கும் ìவிளை நிலங்களைî க் காண உங்கள் இருதயத்தை ஆயத்தப்படுத்துங்கள்.**



**இயேசுவும் சமாரியர்களும்.**

இந்த நிகழ்ச்சியின் பின்னணியைப் புரிந்துகொள்ள **யோவான் 4:4-26** ஐ வாசிக்கவும்.

ஒரு சில விசுவாசிகளே உள்ள இனக்குழுக்களை எவ்வாறு இயேசு நோக்கினார் என்பதைக் காண **யோவான் 4:27-42**ஐ வாசியுங்கள்.

குறிப்பு: இயேசுவும் அவரது சீஷர்களும் யூத இனத்தினர். அக்கால யூதர்கள் சமாரியர்களை அசுத்தமானவர்கள், தீண்டத்தகாதவர்கள் என்று கூறினர்.

கீழ்க்காணும் விவரங்களைக் காணவும்:

a) மற்றவர்கள் வெறுத்த சமாரியர்களை இயேசு எவ்வாறு நடத்தினார் என்பதை வசனங்கள் 27,40 ல்.

b) சமாரியர்களை எவ்வாறு கருத வேண்டும் என்பதைப் பற்றி இயேசு சீஷர்களிடம் கூறியதை வசனம் 35ல்.

c) சமாரியர்கள் இயேசுவை ஏன் விசுவாசித்தனர் என்பதை வசனம் 41ல்.

*[பதில்கள்:*

*a) அவர் அவர்களோடு பேசி, அவர்களை அன்போடு நடத்தி, சில நாட்கள் அவர்களோடு தங்கினார்.*

*b) அறுவடைக்கு தயாரான நிலங்களாக.*

*c) இயேசுவின் வாத்தைகளினால்.]*

**பிற இனக்குழுக்களைப் பற்றி இயேசு நமக்குத் தந்த அதிஉயர்வான கட்டளை.**

**மத்.28:16-20ல் காண்க.**

a) தமது நற்செய்தி எங்கு போக வேண்டும் என்று இயேசு விரும்பினார்? (18)

b) ஒவ்வொரு இனக்குழுவிலும் உள்ள புதிய சீஷர்களுக்கு நாம் என்ன செய்ய வேண்டும்? (19 & 20)

c) பிற இனக்குழுக்களுக்கு நாம் எவ்வளவு காலம் நற்செய்தியைக் கொண்டு செல்ல வேண்டும்? (20)

*[பதில்கள்:*

*a) எல்லா இனக் குழுக்களுக்கும்.*

*b) நமது சமுதாய மக்களுக்கு செய்வது போலவே, அவர்களுக்கும் ஞானஸ்நானம் அளித்து இயேசுவுக்கும் கீழ்ப்படிய போதிக்க வேண்டும்.*

*c) இயேசு திரும்பி வரும் காலத்தின் இறுதி முடிய.]*



நற்செய்தியை தேவ மக்கள் எடுத்துச் செல்ல வேண்டிய நான்கு இடங்கள் உள்ளன. அப்.1:6-11 ல் தமது சீஷர்கள் எங்கு போக வேண்டும் என்று இயேசு கட்டளையிட்டதைக் காண்க.

a) எங்கு நாம் புதிய சீஷர்களை உருவாக்குவதை ஆரம்பிக்க வேண்டும்?

b) அடுத்து நாம் எங்கே போக வேண்டும்?

c) அதற்குப் பின் நாம் எங்கு போக வேண்டும்?

d) இறுதியாக நாம் எங்கு போக வேண்டும்?

*[பதில்கள் (8) :*

*a) எருசலேம் என்பது நமது சொந்த நகரையும் இனத்தையும் குறிக்கிறது.*

*b) யூதேயா என்பது பிற நகரங்களில் இருக்கும் நமது சொந்த இனக்குழு.*

*c) சமாரியா என்பது, அருகில் இருப்பதும் நம்மைப் போன்றதுமான இன்னொரு இனக்குழு.*

*d) 'உலகத்தின் இறுதி பரியந்தம்' என்பது எந்த தேசத்திலும் உள்ள ஏதாவது ஒரு இனக்குழு.]*



**எந்த இனக்குழுவிற்கு தமது சுவிசேஷத்தை நாம் எடுத்துச் செல்ல வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்.**

**குறிப்பு:** 'புற ஜாதிகள்' என்பது யூதரல்லாத இனக்குழுவைக் குறிக்கிறது.

**ரோமர் 15:14-21ல் காண்க:**

*a*) பிற இனக்குழுக்கள் தேவனை ஏற்றுக் கொள்ளும்படி செய்வது எது? (16)

*b*) பிற இனக்குழு மக்களை சீஷர்கள் ஆக்க வல்லமையை எங்கிருந்து பெறுகிறோம்? (18 & 19)

c) புதிய சீஷர்களை உருவாக்க நாம் எங்கு போக வேண்டும்? (20)

[பதில்கள் :

*a*) இயேசுவை அவர்கள் விசுவாசிக்கும் போது பரிசுத்த ஆவியானவர் அவர்களைப் பரிசுத்தப்படுத்துகிறார்.

*b*) இயேசுவிடமும், பரிசுத்த ஆவியானவரிடமும் இருந்து.

c) இயேசுவிடம் விசுவாசம் வைக்காத மக்கள் வாழுமிடத்திற்கு.]

2. **வரும் வாரத்தின் நடவடிக்கைகளைத் திட்டமிட உடன் ஊழியர்களுடன் ஆலோசிக்கவும்**

**இனம் காணுதல்:** உங்கள் மந்தை (சபை) க்கு அருகில் வாழும் புறக்கணிக்கப்பட்ட சமுதாயத்தை இனம் காணுதல்.

**ஜெபம்:** இந்த மக்களுக்கு சேவை செய்வதற்கும் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளவும் உங்கள் சபை என்ன செய்ய வேண்டும் என்பதற்காக இணைந்து ஜெபிக்கவும்.

**சந்திப்பு:** இந்த சமுதாயத்தை சேர்ந்த நபர்களை சந்தித்து அவர்களுடைய பொருளாதார, ஆவிக்குரிய தேவைகளைப் பற்றி அறிந்து கொண்டு நட்புறவை வளர்த்துக் கொள்ளவும்.

**அறிந்துகொள்ளுதல்:** பிற நாடுகளில் உள்ள புறக்கணிக்கப்பட்ட இனக்குழுக்களைப் பற்றி அறிந்து கொண்டு சபைக்கு ஓர் அறிக்கை சமர்ப்பிக்கவும்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்

சிறுவர்களைக் கொண்டு கிணற்றருகில் நின்ற சமாரியப் பெண்ணைப் பற்றிய கதையை நாடகம் ஆக்குக. பிள்ளைகள், தாங்கள் தயாரித்த கேள்விகளைப் பெரியவர்களிடம் கேட்கட்டும்.

இந்த வாரத்தில் கற்றுக்கொண்டவைகளைப் பற்றி **அறிவியுங்கள்.**

புறக்கணிக்கப்பட்ட இனக்குழுக்களுக்காகவும் அங்கு செல்ல விரும்பும் ஊழியர்களுக்காகவும் **ஜெபியுங்கள்.** புறக்கணிக்கப்பட்ட ஒரு இனக்குழுவின் மத்தியில் உங்கள் சபையை பெருக்கும்படியாக அப்போஸ்தலர்களைத் தருமாறு பரிசுத்த ஆவியானவரைக் கேளுங்கள்.

ஏசாயா 52:13-53:6 ஆகிய வசனங்களை வாசித்து **கர்த்தரின் பந்தியை** அறிமுகப்படுத்தவும். ஒவ்வொரு தேசத்திலும் உள்ள எல்லா சமுதாய மக்களிடமும் இரட்சிப்பு செல்ல வேண்டும் என்று இயேசு விரும்புகிறார். நாம் கர்த்தரின் பந்தியை ஆசரிக்கும் அதே சமயத்தில் ஆயிரக்கணக்கான இனக்குழு மக்களும் ஆசரிக்க வேண்டும் என்பதே அவர் விருப்பம்.

**மனன வசனம்:** யோவான் 4:35, விளை நிலங்களைப் பார்க்குமாறு கூறுகிறது.

**ஜெபம்:** "பரலோகத் தந்தையே, எங்களை இரட்சிப்பதற்காக மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவைத் தந்ததற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கும் பிற இனக்குழுக்களுக்கும் உமது சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல எங்களுக்கு உதவுவீராக."



Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net